
# விதைக்கப்படாத நிலத்தில் நுழைதல்




தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சி விதைக்கப்படாத நிலத்தில் நுழையும் விசுவாசிகளிடமிருந்து தொடங்குகிறது. இந்த விதைக்கப்படாத நிலம் என்பது

இயேசுவைப் பின்பற்றாத மக்கள். இந்த அவிசுவாசிகளில் சிலர் நமக்குத் தெரிந்தவர்கள், இன்னும் சிலர் நாம் சந்திக்காதவர்கள். தேவனுடைய ராஜ்யம் வளர விதைக்கப்படாத நிலத்தில் நுழைவது எப்படி என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

## நாம் இதுவரை சந்திக்காத நபர்களின் விதைக்கப்படாத நிலத்தில் எவ்வாறு நுழைய முடியும்?

லூக்கா 10:1-12:

> இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;

ஆகையால் அறுப்புக்கு எஜமான்
(அறுவடையின் எஜமான்) தம
வேலையாட்களை அனுப்பும்படி
அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.
புறப்பட்டுப்போங்கள்;
ஆட்டுக்குட்டிகளை
ஓநாய்களுக்குள்ளே
அனுப்புகிறதுபோல, இதோ, நான்
உங்களை அனுப்புகிறேன்.
பணப்பையையும் சாமான்
பையையும் பாதரட்சைகளையும்
கொண்டுபோகவேண்டாம்; வழியிலே
ஒருவரையும் வினவவும் வேண்டாம்.
ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த
வீட்டுக்குச் சமாதானம்
உண்டாவதாகவென்று முதலாவது
சொல்லுங்கள். சமாதான பாத்திரன்
அங்கே இருந்தால், நீங்கள் கூறின
சமாதானம் அவனிடத்தில் தங்கும்,
இல்லாதிருந்தால் அது
உங்களிடத்திற்குத் திரும்பிவரும். அந்த
வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து,
அவர்கள் கொடுக்கிறவைகளைப்

புசித்துக் குடியுங்கள்; வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள். ஒரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொண்டால் அவர்கள் உங்கள்முன் வைக்கிறவைகளை நீங்கள் புசித்து, அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். யாதொரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதின் வீதிகளிலே நீங்கள் போய்: எங்களில் ஒட்டின உங்கள் பட்டணத்தின் தூசியையும் உங்களுக்கு விரோதமாய்த் துடைத்துப்போடுகிறோம்; ஆயினும் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறதென்பதை


> அறிந்துகொள்வீர்களாக என்று சொல்லுங்கள். அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் அந்த நாளிலே சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இந்த சீஷர்களை இயேசு எவ்வாறு அனுப்புகிறார் என்பதன் மூலம் நாம் இதுவரை சந்திக்காத மக்களின் விதைக்கப்படாத நிலத்தில் நுழைவது எப்படி என்பதை நாம் காணலாம். இந்த வசனங்களில், புதிய நிலங்களில் நுழையும்போது என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்ற கொள்கைகளை நாம் கற்றுக்கொள்கிறோம்:

# செய்ய வேண்டியது



இரண்டிரண்டு நபர்களாக செல்லுங்கள்



அதிகமான வேலையாட்களுக்காக ஜெபியுங்கள்



நல்ல மேய்ப்பனைப் பொறுத்து ஓநாய்களின் நடுவில் ஆட்டுக்குட்டிகளாகச் செல்லுங்கள்



ஒரு வீட்டிற்குள் நுழையுங்கள்



“இந்த வீட்டிற்கு சமாதானம்!” என்று கூறுங்கள்



இயேசுவைப் பற்றிய உண்மையைப் பெறும் அமைதியான ஒருவரைக் கண்டுபிடியுங்கள்



வீட்டில் இருங்கள்



வழங்கப்பட்டதை உண்ணுங்கள், அருந்துங்கள்



குணமடைய
ஜெபியுங்கள்



தேவனுடைய
நற்செய்தி,
ராஜ்யத்தின்
வருகையை
அறிவியுங்கள்



ஒரு இடத்தை அல்லது
நபரை எப்படி,
எப்போது விட்டுச்
செல்ல வேண்டும்
என்பதை அறிந்து
கொள்ளுங்கள்

## செய்ய கூடாதது



தேவையானதை விட அதிகமான நபர்கள் செல்ல வேண்டாம்



சாலையில் யாரையும் வாழ்த்த வேண்டாம் அல்லது தேவன் வழிநடத்தும் இடத்திலிருந்து திசைதிரும்ப வேண்டாம்



வீடு வீடாகச் செல்ல வேண்டாம்

நாம் இதுவரை சந்திக்காத நபர்களின் விதைக்கப்படாத நிலங்களில் நுழையும்போது இந்தக் கொள்கைகளைப் பயன்படுத்தலாம். அனுப்பப்பட்டவர்களாகிய நம்முடைய கவனம், இயேசுவைப் பற்றிய சத்தியத்தை பெற்று, அவரைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கும் சமாதான நபர்களைக் கண்டுபிடிப்பதாக இருக்க வேண்டும். நாம் இந்த மக்களுடன் இருக்கிறோம், அவர்களை விசுவாசத்தின் படிகளில் தொடர்ந்து வழிநடத்துகிறோம். இந்த கோட்பாடுகள் ஒவ்வொரு சூழலுக்கும் நேரடியாகப் பொருந்தாது, ஆனால் அவை நமக்குப் புதியவர்களுடன் ஈடுபடுவதற்கான அணுகுமுறைக்கு பயனுள்ள ஞானத்தை வழங்குகின்றன.

## ஏற்கனவே நமக்கு தெரிந்தவர்களின் விதைக்கப்படாத நிலத்தில் நாம் எவ்வாறு நுழைய முடியும்?

அப்போஸ்தலர் 16:25-34:


> நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. சிறைச்சாலைக்காரன் நித்திரைதெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி,

பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு; நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான். அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்துவந்து: ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை

அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.

அனைவரும் இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார், நாமும் இதை விரும்புகிறோம். இயேசுவை விசுவாசிக்கிற ஒருவர் முதலில் தங்கள் குடும்பத்தினரையும் நண்பர்களையும் இயேசுவை விசுவாசிகும்படி அழைக்கிறார் என்பது வேதாகமத்தில் அடிக்கடி சொல்லப்படும் ஒரு முறை. பவுல், சீலா, சிறைச்சாலைக்காரன் ஆகியோரின் கணக்கிலும் இதுதான்.

பவுலும் சீலாவும் சிறைச்சாலைக்காரனிடம் அவனும் அவனது குடும்பத்தினரும் காப்பாற்றப்படுவார்கள் என்று கூறுகிறார்கள். அன்றிரவு இயேசுவின் செய்தி சிறைச்சாலைகாரனின் வீட்டுக்கு பரவியது. சிறைச்சாலைகாரனின் குடும்பத்தினர் விசுவாசிகிறார்கள், அன்றிரவே ஞானஸ்நானம் பெறுகிறார்கள்.




திறமையான சாட்சிகளாக நாம் விளங்கக்கூடிய ஒரு வழி, நாம் ஏற்கனவே அறிந்தவர்களைக் கவனித்து அவர்களின் இரட்சிப்பைத் தேடுவது. இதைச் செய்ய, இயேசுவைப் பின்பற்றாதவர்கள் யார் என்று நமக்கு முன்பே தெரிந்த சிலர், குறைந்தது 30 பேரின் பெயர்களையாவது பட்டியலிட சிறிது நேரம் ஆகலாம். இந்த மக்கள்

நமக்கு நெருக்கமானவர்கள், ஆனால் தேவனிடமிருந்து வெகு தொலைவில் உள்ளனர். இந்த மக்கள் தேவனுடனான உறவில் வளரவில்லை. இந்த நபர்கள் குடும்ப உறுப்பினர்கள், சக பணியாளர்கள், வகுப்பு தோழர்கள், கடை உரிமையாளர்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த வேறு நபர்களாக இருக்கலாம். இந்த மக்களின் விதைக்கப்படாத நிலத்தில் தேவன் நம்மைப் பயன்படுத்த முடியும்.

நமது பட்டியலை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, இந்த மக்களுடன் உண்மையாக ஜெபிக்கவும், நேசிக்கவும், இயேசுவின் நற்செய்தியை பகிர்ந்து கொள்ளவும் முடியும்.

# 30 பெயர்களை பட்டியலிடுங்கள்



ஜெபியுங்கள்



அன்பு செலுத்துங்கள்



நற்செய்தியைப் பகிர்ந்து
கொள்ளுங்கள்

**ராஜ்ய வளர்ச்சிக்கு**

© 2023 ராஜ்ய வளர்ச்சிக்கு

ராஜ்ய வளர்ச்சிக்கான கூடுதல் தகவலுக்கு, கொடுக்கப்பட்டுள்ள லின்க்கை கிளிக் செய்யவும்:
**www.forkingdomgrowth.com**

Scripture quotations are from The Holy Bible, BSI - Tamil - O.V. (New Ortho) published by The Bible Society of India. Used by permission. All rights reserved.

ராஜ்ய வளர்ச்சிக்கு இந்த பொருளுக்கு பங்களித்த அனைவருக்கும் மிக்க நன்றி. கர்த்தரில் நீங்கள் செய்த சேவை ஒருபோதும் வீணாகாது.